# இபன்கட்டுவ பெருங்கற்கால மையமும் அதன் காட்சிக் கூடமும்

**டினேசன் துளசிகா**

வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

*dineshthulasi30@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்:** *இலங்கையின் பண்பாட்டு வரலாற்றில் பெருங்கற்காலப் பண்பாட்டின் பரவல் புதிய கால கட்டத்தின் தொடக்கமாக அல்லது திருப்பு முனையாக அமைந்ததெனக் கூறலாம். பெரிய கற்களை தமது சவஅடக்க முறைகளுக்கு பயன்படுத்தியமை காரணமாக பெருங்கற்காலம் என அழைக்கப்படுகின்றது. இலங்கையில் பெருங்கற்காலப் பண்பாடு தொடர்பான சான்றுகள் 1889 களில் இருந்து தெரிய வந்திருந்தாலும் நாகரீக உருவாக்கத்தில் அப் பண்பாடு பெறும் முக்கியத்துவம் பற்றிய ஆய்வுகள் பெரும்பாலும் 1970களின் பின்னரே உருவாக்கப்பட்டது. இலங்கையில் கடந்த இரு சகாப்த காலங்களில் 50க்கும் மேற்பட்ட இடங்களில் இப் பண்பாடு பற்றிய சான்றுகள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு முக்கிய மையமாக இபன்கட்டுவ பெருங்கற்கால மையம் அமைவு பெறுகின்றது. இம் மையம் மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்தின் கலகவல பிரதேசத்தில் அமைந்துள்ளது. இம் மையத்தின் சிறப்பியல்பே 2500 வருட காலத்திற்கு முன்னைய இடுகாட்டுப் பரப்பு கண்டறியப்பட்டமையாகும். இங்கு இரண்டு சவ அடக்க முறைகளான கல்லறைகள், ஈமத்தாழிகள் என்பன முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. அத்துடன் பண்டைய கால சமூகத்தில் மக்கள் இறந்ததற்குப் பின்பு அவர்களுக்கு ம*
*றுவாழ்வு உண்டு என்ற நம்பிக்கையில் அவர்கள் வாழ் நாளில் பயன்படுத்திய பொருட்களை அவர்களின் இறந்த உடலுடன் சேர்த்து புதைத்தனர். இதனால் பல்வேறு வகையிலான சவ அடக்க முறைகளை பின்பற்றியிருந்தனர். அவற்றுள் கல்லறைகள், கற்திட்டைகள், தாழிகள் என்பன முக்கியம் பெறுகின்றன.அவ்வகையில் இவ் இபன்கட்டுவ மைய அகழ்வாய்வில் இறந்தவர்களுக்கான சவ அடக்க முறைகளுடன் பல்வேறு வகையான தொல்லியல் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மட்பாண்டங்கள், சிறிய அளவிலான சட்டிகள், கலசங்கள், பானைகள், குவளைகள், வட்டில்கள், கறுப்பு சிவப்பு நிற மட்பாண்டங்கள், பல்வேறு வகையிலான ஆபரணப் பொருட்கள், சடங்குகளுக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்கள், கல்மணிகள், அயல் நாட்டு மட்பாண்டங்கள், நாணயங்கள், குறியீடுகள் பொறிக்கப்பட்ட மட்பாண்ட துண்டுகள், சுடுமண்ணுருவங்கள், இரும்பு பொருட்கள் என்பன சிறப்பாக குறிப்பிடத்தக்கன. இத்தகைய ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு இபன்கட்டுவ பெருங்கற்கால மையத்தில் நிலவிய புராதன மக்களது மொழி, எழுத்து, அரசியல், பொருளாதாரம், சமூகம், சமயம், மக்களது வாழ்வியல் அம்சங்ள், சடங்குகள், சம்பிரதாயங்கள், நாளாந்தம் பயன்படுத்தப்பட்ட பாவனைப் பொருட்கள், சவ அடக்க முறைகள், அயல் நாடுகளுடன் கொண்ட தொடர்புகள், உலோகப் பாவனை, கலைமரபு போன்ற விடயங்களை ஆராய்வதே இவ் ஆய்வின் நோக்கம் ஆகும். இவ் ஆய்வின் துணை நோக்கமாக இபன்கட்டுவ தொல்லியல் மையத்தின் காட்சிக் கூடம் தொடர்பாக ஆராய்வதாகும். வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் விவரண ஆய்வாக அமையப்பெற்ற இவ்வாய்விற்கு தேவையான தகவல்கள் முதல்நிலை தரவுகள், இரண்டாம் நிலைத் தரவுகள் என்ற அடிப்படையில் பெறப்பட்டன. அவ்வகையில் நேர்காணல்கள், களஆய்வுகள் முதல்நிலைத் தரவுகள் என்ற வகையில் அடங்க குறித்த இவ்விடயம் தொடர்பாக வெளிவந்த நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள் இரண்டாம் நிலைத் தரவுகளாகவுள்ளன.*

**திறவுச் சொற்கள்** :பண்பாடு, சவஅடக்கம், சமூகம், நாணயங்கள், அகழ்வாய்வு

## 1. அறிமுகம்

நாடோடிகளாக உணவுக்காகவும், இருப்பிடத்திற்காகவும் அலைந்து திரிந்த மக்கள் எப்போது அவ் வாழ்க்கை முறையிலிருந்து விடுபட்டு ஓரிடத்தில் நிலையாகக் குடியேறி, நிரந்தர பொருளாதார உற்பத்தியில் ஈடுபடத் தொடங்கினார்களோ அப்போதே நாகரீக வரலாறு தொடங்குகின்றது. இந்த மாற்றம் உலகின் பல நாடுகளில் இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்குள்தான் நிகழ்ந்துள்ளதை தொல்லியல் ஆய்வுகள் வெளிப்படுத்துகிறன. இலங்கையை பொறுத்த வரை இவ் நாகரீக உருவாக்கம் ஏறத்தாழ இற்றைக்கு 3000 ஆண்டளவிலேயே ஏற்பட்டுள்ளதை தொல்லியல் ஆதாரங்கள் உறுதி செய்கின்றன. பெருங்கற்காலப் பண்பாடு என்ற சொல் ஆதிகாலத்தில் இறந்தவர்களுக்காக பெரிய கற்களைப் பயன்படுத்தி ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்டதன் காரணமாகத் தோன்றியதாகும். பண்டைய காலங்களில் உலகின் பல நாடுகளில் கற்களைப் பயன்படுத்தி பல்வேறு வடிவங்களில், பல

அளவுகளில் ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்டதற்கு ஆதாரங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றின் வடிவமைப்புக்களில் நாடுகளுக்கிடையே வேறுபாடுகள் காணப்பட்டாலும் இறந்தவர்களுக்கு மறுபிறப்பு உண்டு என்ற நம்பிக்கையில் ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்டன என்பதில் பொதுவான ஒற்றுமைகள் காணப்படுகின்றன. அவ்வகை மையங்களுள் ஒன்றாக இபன்கட்டுவ தொல்லியல் மையம் விளங்குகின்றது. இபன்கட்டுவ பெருங்கற்கால மையத்தின் சிறப்பியல்பு 2500 வருட காலத்திற்கு முன்னைய இடுகாட்டுப் பரப்பு கண்டறியப்பட்டமையாகும். இம் மையத்தின் சவ அடக்க மையம் 13 ஹெக்டேயர் பரப்பினை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இவ் சவ அடக்க முறைகளுடன் பல்வேறு வகையிலான தொல்பொருட் சின்னங்களான மட்பாண்டங்கள், சிறிய அளவிலான சட்டிகள், கலசங்கள், பானைகள், குவளைகள், வட்டில்கள், கறுப்பு சிவப்பு நிற மட்பாண்டங்கள், பல்வேறு வகையிலான ஆபரணப் பொருட்கள், சடங்குகளுக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்கள், கல்மணிகள், அயல் நாட்டு மட்பாண்டங்கள், நாணயங்கள், குறியீடுகள் பொறிக்கப்பட்ட மட்பாண்ட துண்டுகள், சுடுமண்ணுருவங்கள், இரும்பு பொருட்கள் என்பன கிடைத்துள்ளன. இவ் பெருங்கற்கால மயானத்தில் இரண்டு வகையான தொல்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை காட்சிப்படுத்துவதற்கு பல்வேறு காட்சிப்படுத்தல் முறைகளும் பின்பற்றப்பட்டுள்ளன. இவ் வகையில் இம் மையத்தில் கிடைக்கப் பெற்ற தொல்பொருள் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் பண்பாட்டம்சங்களை ஆராய்வதுடன் இபன்கட்டுவ காட்சிக் கூடத்தின் அமைப்பு முறை, குறைகள் தொடர்பாக விளக்குவதாக இவ் ஆய்வு அமைகின்றது.

## 2. ஆய்வின் நோக்கம்

இபன்கட்டுவ பெருங்கற்கால மையத்தில் நிலவிய புராதன மக்களது மொழி, எழுத்து, அரசியல், பொருளாதாரம், சமூகம், சமயம், மக்களது வாழ்வியல் அம்சங்ள், சடங்குகள், சம்பிரதாயங்கள், நாளாந்தம் பயன்படுத்தப்பட்ட பாவனைப் பொருட்கள், சவ அடக்க முறைகள், அயல் நாடுகளுடன் கொண்ட தொடர்புகள், உலோகப் பாவனை, கலைமரபு போன்ற விடயங்களை ஆராய்வதே இவ் ஆய்வின் நோக்கம் ஆகும். இவ் ஆய்வின் துணை நோக்கமாக இபன்கட்டுவ தொல்லியல் மையத்தின் காட்சிக் கூடம் தொடர்பாக ஆராய்வதாகும்.

## 3. ஆய்வு முறையியல்

இபன்கட்டுவ பெருங்கற்கால மையத்தில் கிடைக்கப்பெற்ற தொல்பொருட் சின்னங்கள், சவ அடக்க முறைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அம் மையத்தின் வரலாற்றை வெளிப்படுத்தும் வகையில் அவற்றின் மொழி, எழுத்து, சமூக, பொருளாதார, வாழ்வியல், கலையம்சங்கள் போன்றவற்றை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது. இந்த ஆய்வானது வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையிலும், விளக்க முறை ஆய்வு அடிப்படையிலும் மேற்கொள்ளப்படுகின்றது. முதல் நிலைத் தரவுகளும், இரண்டாம் நிலைத் தரவுகளும் ஆய்வின் தேவையினை கருத்திற்கொண்டு பயன்படுத்தப்பட்டுள்ளன. முதல் நிலைத் தரவுகளுள் நேர்காணல்கள், களஆய்வுகள் என்பன உள்ளடங்குகின்றன. இரண்டாம் நிலைத் தரவுகளுள் இபன்கட்டுவ மையத்தின் முழுமையான வரலாற்றினை வெளிக்கொண்டுவருவதற்கு ஆய்வுத் தலைப்புடன் தொடர்புடைய ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள், சஞ்சிகைகள், நாளிதழ்கள், ஆய்வேடுகள், அறிக்கைகள், இணையத்தளக் கட்டுரைகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 4. ஆய்வின் முடிவு

இபன்கட்டுவ பெருங்கற்கால மையத்தின் சிறப்பியல்பு 2500 வருட காலத்திற்கு முந்திய இடுகாட்டுப் பரப்பு கண்டறியப்பட்டமையாகும். தம்புள்ளை நகரிலிருந்து 5முஅ தொலைவில் குருநாகல் வீதியிலிருந்து வலப்புறமாக 500அ தொலைவில் இவ் மையம் காணப்படுகின்றது. இவ் சவ அடக்க மையம் 13 ஹெக்டெயர் பரப்பு உடையதாக அமைந்துள்ளது. இங்கு தனித்துவமான கல்லறை, ஈமத்தாழி போன்ற சவஅடக்க முறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. 1960 களின் பின்னர் விவசாய நடவடிக்கைகளுக்காக நிலம் பண்படுத்தப்பட்ட போது கல்லறைக் கற்களும், சில தொல்பொருட்களும் அடையாளம் காணப்பட்டன. அதன் பின்னனியில் நில அளவைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட அளவை நடவடிக்கைகளின் போது இப் பிரதேசம் அடையாளப்படுத்தப்பட்டு தொல்லியல் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டது.

இபன்கட்டுவ அகழ்வாய்வின் முதற்கட்டம் தொல்லியல் திணைக்களத்தின் உதவியுடன் கலாநிதி ராஜ் டீ சில்லா தலைமையில் 1970 களில் மேற்கொள்ளப்பட்டது. இவர் கொழும்பு தம்புள்ள வீதியின் அருகிலுள்ள பகுதியில் அகழ்வாய்வினை மேற்கொண்டு பல கல்லறை தொகுதிகளையும், மட்பாண்ட எச்சங்களையும் சேகரித்தார். இரண்டாவது கட்டமாக 1988,1990 காலப்பகுதியில் சேனகபண்டாரநாயக்கா தலைமையில் மத்திய கலாச்சார நிதியம், ஜேர்மனின் முயுறுயு நிறுவனமும் இணைந்து பிரதான வீதியிலிருந்து 500அ தொலைவிலுள்ள இடத்தில் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இங்கு 10 ஓ 10 மீற்றர் அளவுள்ள பிரதேசம் அகழ்வு செய்யப்பட்டதுடன் அங்கிருந்து 12ற்கு மேற்பட்ட கல்லறைகள் அகழ்ந்தெடுக்கப்பட்டதுடன் ஈமத்தாழிகளும் அடையாளப்படுத்தப்பட்டன. இங்கு மனித உடலகள் எரிக்கப்பட்டமைக்கான மரத்துண்டங்கள் மற்றும் கரித்துகழ்கள் போன்ற சான்றுகளுடன் கார்ணீலியன், கண்ணாடி மணிகள், சுடுமண் வளையல்கள், கறுப்பு சிவப்பு மட்பாண்டங்கள் என்பன கிடைக்கப்பெற்றுள்ளன. இங்கு கிடைக்கப் பெற்றுள்ள கரித்துண்டுகளை ஊ14 காலக்கணிப்பிற்கு உட்படுத்திய போது அதன் காலகட்டம் கி.மு 650 எனத் தெரிய வந்துள்ளது.

2015ஆம் ஆண்டில் மத்திய கலாச்சார நிதியத்தினால் பிரசாந்த குணவர்த்தன தலைமையில் ரஞ்சித பண்டார, அஜித் ஜயசுந்தர குழுவினரால் 15 பட்டதாரிகள், 10 உதவியாளர்களுடன் மூன்றாவதாக அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இவ் அகழ்வாய்வின் மூலம் 25 கல்லறைகளும் 15 பெரிய தாழிகளும் அகழ்ந்தெடுக்கப்பட்டன. அத்துடன் சாம்பலுடன் கூடிய மனித உடற்பாகங்கள், கல்மணிகள், வளையல்கள், பாவனைப் பொருட்கள், மட்பாண்டத் துண்டுகள் என்பன கண்டறியப்பட்டன. இங்கு கிடைத்த கரிமப் பொருட்களை காலக் கணிப்பிற்கு உட்படுத்திய போது 1990 கால ஆய்வு முடிவினைத் தந்துள்ளது. இவ்வாறான அகழ்வாய்வுகள் மூலம் பண்டைய கால மனித சமூதாய கட்டமைப்பினையும், பண்பாட்டம்சங்களையும் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

பண்டைய கால சமூகத்தில் மக்கள் இறந்ததற்குப் பின்பு அவர்களுக்கு மறுவாழ்வு உண்டு என்ற நம்பிக்கையில் அவர்கள் வாழ் நாளில் பயன்படுத்திய பொருட்களை அவர்களின் இறந்த உடலுடன் சேர்த்து புதைத்தனர். இதனால் பல்வேறு வகையிலான சவ அடக்க முறைகளை பின்பற்றியிருந்தனர். அந்த வகையில் இபன்கட்டுவ பிரதேசத்தில் பின்வரும் மூன்று வகையான சவ அடக்க முறைகள் பின்பற்றப்பட்டன. அவை பின்வருமாறு,

- கல்லறைகள் - நான்கு புறமும் கற்களால் மூடப்பட்டு மேற்புறம் மூடிக்கல்லால் மூடப்பட்டு உள்ளே பாவனைப் பொருட்கள் கொண்டதாக காணப்படும்.
- கற்திட்டை - கல்லறைகளைப் போல் நான்கு புறமும் பலகைக் கற்கள் காணப்படுவதுடன் அரைப் பகுதி நிலத்திற்கு மேல் தெரியும் வண்ணம் மூடிக் கற்கள் கொண்டு மூடப்பட்டிருக்கும்.
- தாழி - பெரிய மண் பானையில் உடலை எரித்த சாம்பல், எலும்புகள், சிறு சிறு மண்பாண்டங்கள், கல்மணிகள், வளையல்கள் போன்றவற்றினை உள்ளே வைத்து மூடி மண்ணிற்குள் புதைத்து அதன் மேல் பலகைக் கல் ஒன்றினை நட்டு வைத்தல்.

தம்புள்ளவின் கந்தலம பகுதி பிராமி எழுத்துக்களையும், இபன்கட்டுவ பகுதியில் கிடைத்த குறியீடுகளையும் ஆய்வு செய்த ராஜ் சோமதேவா பெருங்கற்கால குடியிருப்புப் பகுதி தம்புள்ளவில் இருந்து வடகிழக்கில் 3மஅ தொலைவில் அமைந்திருக்கலாம் எனக் கூறியிருப்பது இவ் மைய முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுகின்றது.

இலங்கையின் எழுத்து, மொழி உருவாக்கம் பௌத்த மத வருகையுடன் தோற்றம் பெற்றதாக கூறப்படுகின்றது. எனினும் அண்மைக்கால தொல்லியல் ஆய்வுகள் அதனை நிராகரித்து பெருங்கற்கால மக்களினுடைய குறியீட்டு மரபு எழுத்துக்களின் தோற்றத்திற்கு அடிப்படையாக இருந்ததனை உறுதிப்படுத்துகின்றது. இவ்வாறான ஆதாரங்கள் இபன்கட்டுவ பிரதேசத்தில் கிடைக்கப்பெற்ற கல்லறைகளின் மூடிக் கற்களிலும், மட்பாண்டத் துண்டுகளிலும் காணப்படுகின்றன. இவ்வாதாரங்கள் இப் பிரதேசத்தின் வரலாற்றுத் தொன்மையினை எடுத்துக்காட்டுகின்றன.

இபன்கட்டுவ அகழ்வாய்வின் முக்கிய அம்சமாக காணப்படுவது பாளி இலக்கியங்கள் கூறுகின்ற மனித வரலாறு தொடர்பான ஆதாரங்களை மாற்றியமைத்தமையாகும். மகாவம்சம், தீபவம்சம் போன்ற பாளி இலக்கியங்களில் கி.மு 6ம் நூற்றாண்டளவில் வருகை தந்த விஜயனும் அவனது கூட்டத்தாரோடும் மனித வரலாறு தொடங்குவதாக கூறப்படுகின்றது. அதற்கு முன் இங்கு வாழ்ந்த மனிதர்களை அவர்கள் மனிதர்கள் அல்ல எனவும் அமானுஜர்கள் என காட்டப்படுகின்றனர். எனினும் இபன்கட்டுவ அகழ்வாய்வில் கிடைக்கப்பெற்ற தொல்பொருட்கள் அதற்கு முன்னரே மனித வரலாறு தொடங்குவதனை எடுத்துக்காட்டுவதுடன் 1988 – 2015 வரையான காலப் பகுதியில் காபன் காலக் கணிப்பு முறை செய்யப்பட்ட சாம்பல் படிவுகளின் காலம் கி.மு 650 எனவும் தொல்பொருட்களின் காலம் கி.மு 4ம் நூற்றாண்டிற்கு முற்பட்டவை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இபன்கட்டுவ அகழ்வாய்வில் கிடைக்கப்பெற்ற தொல்பொருட்சான்றுகள் வணிக ரீதியில் பெருங்கற்கால மக்கள் முன்னேறியிருந்தமையினை ஆதாரங்களுடன் நிரூபிக்கின்றது. இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் கிடைக்கப்பெற்ற கல்மணிகள், சுடுமண்ணுருவ வடிவங்களை தவிர ஏனையவை இப் பிராந்தியத்திற்கு உரியவையாக காணப்படவில்லை. குவாட்ஸ், கண்ணாடி, மணிகள் என்பன இலங்கையின் வேறு பகுதியிலிருந்து அதாவது உள்நாட்டு வணிக உறவின் மூலம் கொண்டுவரப்பட்டதனை அறிய முடிகின்றது. இவ்வாதாரங்கள் கிராமிய வாழ்க்கை முறையில் வணிகம் பெற்ற முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுவதாக ராஜ் சோமதேவா குறிப்பிடுகின்றார். இதனை உறுதிப்படுத்தும் வகையில் கட்டுக்கரை அகழ்வாய்வில் அகேட், கார்ணீலீயன் கற்களும் கல் மணிகளும் கிடைத்திருப்பது பெருங்கற்கால மக்களின் வணிகத் தொடர்பினை எடுத்துக்காட்டுகின்றது.

பெருங்கற்கால மக்களது வாழ்வியலில் மட்பாண்டங்கள் பெற்றிருந்த முக்கியத்துவத்தினை இபன்கட்டுவ அகழ்வாய்வில் கிடைக்கப்பெற்ற பல்வேறு வகையான மட்பாண்ட எச்சங்கள் உறுதி செய்கின்றன. இங்கு தாழிகள், சிறு மண் சட்டிகள், கலசங்கள், கறுப்புச் சிவப்பு மட்பாண்டங்கள், குவளைகள், வட்டில்கள் என பல வகையான மட்பாண்டங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவை ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு வகையான தொழிநுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக நெருப்பின் பக்கம் வாய்ப்பகுதி வைக்கப்படுவதனால் உட்புறம் கறுப்பாகவும் வெளிப்புறம் சிவப்பாகவும் மாறிக் காணப்பட்டிருந்தன. தாழியடக்கத்திற்கு பயன்படுத்தப்பட்ட மட்பாண்டங்களில் பானை வடிவ மட்பாண்டங்கள், களஞ்சிய குவளை வடிவத் தாழி மட்பாண்டங்கள் என இரு வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் இவை சுதேசமான முறையில் தயாரிக்கப்பட்டிருந்தன. அத்துடன் இங்கு உலோகப் பாவனை இடம்பெற்றமையினை இவர்களின் குடியிருப்பு மையங்களிலிருந்து கண்டெடுக்கப்பட்ட இரும்புப் பாகங்கள், கழிவிரும்புக்கள் என்பன உறுதி செய்கின்றன.

பெருங்கற்கால மக்களின் வாழ்வியல் முறையில் சடங்குகள் பெற்ற முக்கியத்துவத்தினை இபன்கட்டுவ ஆய்வுகள் ஊடாக அறிய முடிகின்றது. இறப்பிற்கு பின்னரான மறுஉலக வாழ்க்கையினை பிரதிபலிப்பதாக இச் சடங்குகள் அமைகின்றன. இறந்தவரை எரிக்கும் வழக்கம் பின்பற்றப்பட்டுள்ளது. இதற்கு உதாரணமாக 1988 ஆம் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் மனித உடல்கள் எரிக்கப்பட்டமைக்கான கரித்துகழ்கள், என்புப் பாகங்கள் கிடைத்ததனைக் குறிப்பிடலாம். அதேபோல் ஈமத்தாழிகளில் மனித உடற் சாம்பல்கள், எலும்புகள் என்பன கிடைத்திருப்பது சடங்கு முறையில் அக்கால மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையினை எடுத்துக்காட்டுகின்றது. இவற்றுடன் அம் மக்கள் வாழ்நாளில் பயன்படுத்திய அனைத்து வகையான பாவனைப் பொருட்களும் கல்லறைகளுக்குள்ளும், ஈமத்தாழிகளுக்குள்ளும் வைக்கப்பட்டிருந்தன. இவை எகிப்திய பிரமிட் முறையுடன் ஒத்துப்போகக் கூடிய சடங்கு முறையாக காணப்படுகின்றது.

மனித வாழ்வியலில் ஆபரணப் பொருட்கள் பெற்ற முக்கியத்துவத்தினை இபன்கட்டுவ ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. கார்ணீலியன், அகேட், ஒனெக்ஸ், குவாட்ஸ், கண்ணாடி, தங்கமுலாமுடன் ஊடிய களிமண் முத்துக்கள் என பலவகை ஆபரணங்கள் கிடைக்கப் பெற்றமையானது அம் மக்கள் சமூதாயத்தில் பின்பற்றப்பட்ட ஆபரணக்கலை , கைத்தொழில் போன்ற விடயங்களை அறிந்து கொள்ள முடிகின்றது.

இபன்கட்டுவ பகுதியில் வாழ்ந்த பெருங்கற்கால மக்களால் பின்பற்றப்பட்ட விவசாய முறையினை இங்கு கல்லறை தொகுதிக்கு அருகில் காணப்படும் குளம் மழை நீர், ஆற்று நீர்

என்பனவற்றை சேகரிக்கக் கூடிய வகையில் செயற்கையாக உருவாக்கப்பட்டமை மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இது கிராமிய குள அமைப்பின் தோற்றத்தை எடுத்துக்காட்டுவதுடன் இப் பிராந்தியத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சில ஈமத்தாழிகளில் அவிக்கப்பட்ட அரிசி காணப்பட்டமையும் விவசாய உற்பத்தியினை உறுதிப்படுத்துகின்றது.

ஓர் தொல்லியல் மையத்தை காட்சிக் கூடமாக மாற்றி அங்கு கிடைத்த தொல்பொருட்களை அங்கே காட்சிப்படுத்த முடியும் என்பதற்கு இபன்கட்டுவ காட்சிக் கூடம் ஓர் சிறந்த உதாரணமாகும். இவ் அருங்காட்சியத்தில் கல்லறைகள், ஆய்வில் கிடைத்த தொல்பொருட்கள் என இரண்டு வகையாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு பல்வேறு வகையான காட்சிப்படுத்தல் முறைகள் பின்பற்றப்பட்டுள்ளன.

2500 வருட காலத்திற்கு முற்பட்ட சவ அடக்க முறைகளை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக 36 கல்லறை தொகுதிகளையும் அகழ்வு செய்யப்பட்ட பகுதிகளில் அவ்வாறே செப்பனிடப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இவை மூடிக் கல்லுடன் உள்ளவை, மூடிகளற்றவை என பிரிக்கப்பட்டுள்ளது. கல்லறைத் தொகுதிகள் தரைமட்டத்திற்கு கீழே காணப்படுவதுடன் கல்லறை அமைந்துள்ள பிரதேசத்திலிருந்து குறிப்பிட்டளவு இடைவெளியில் சாய்வாக வெட்டப்பட்டு அவற்றில் புற்கள் நடப்பட்டுள்ளன. பார்ப்பதற்கு பசுமையாக முதலாவது கல்லறைத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது.

ஆகழ்வாய்வில் கிடைக்கப்பட்ட மட்பாண்டங்களை மாதிரி உருக்களால் அமைந்த திறந்த வெளி நூதனசாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளதுடன் இது 20 ஓ 10 அடி நீளம் கொண்டதாகவும் 3 அடி உயரமான மண்பீடத்தில் 34 மட்பாண்ட வகைகளான ஈமத்தாழிகள், பானைகள், சட்டிகள், குவளைகள், கலசங்கள், களஞ்சியப் பானைகள், தட்டுகள், வட்டில்கள், குடங்கள் என்ற வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இபன்கட்டுவ காட்சிக்கூடத்தில் புகைப்பட காட்சிப்படுத்தல்களும் முக்கியமான அம்சமாகக் காணப்படுகின்றது. இயற்கையான முறையில் மரங்களால் அமைக்கப்பட்ட வேலிகளில் கண்ணாடிகளில் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இவை காட்சிக்கூடம் தொடர்பான விளக்கங்களைத் தருவதுடன் கல்லறை ஒன்றும் அதற்குள் மட்பாண்டங்களும், ஈமத்தாழி அமைப்பு, சிறு மட்பாண்டங்கள், கல்மணிகள், சுடுமண் மாலைகள், ஈட்டி முனைகள் என்பன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

ஓவ்வொரு அகழ்வு செய்யப்பட்ட மையத்தின் அருகே அதனோடு தொடர்புடைய புகைப்படங்கள், அகழ்வாய்விற்கு முந்திய நிலை, ஆரம்ப கட்ட அகழ்வாய்வுகள், அகழ்வாய்விற்கு பின்னரான தோற்றம், தற்போதைய நிலை என்ற வகையில் படிமுறையாக புகைப்படங்களினூடாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் இபன்கட்டுவ தொடர்பாக இலங்கைப் பாட நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களையும் தனியான பலகை ஒன்றில் காட்சிப்படுத்தியுள்ளனர். அத்துடன் இங்கு காட்சிப்படுத்தப்பட்ட புகைப்படங்களில் அவற்றின் பெயர்கள் தமிழ், சிங்களம் , ஆங்கிலம் ஆகிய 03 மொழிகளில் எழுதப்பட்டுள்ளன. மாதிரி மட்பாண்டங்களில் அவற்றின் பெயர், காலம், கண்டெடுக்கப்பட்ட இடம் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.

இபன்கட்டுவ மையம் தற்போது சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரும் இடமாக காணப்படுகின்றது. இங்கு சுற்றுலாப் பயணிகளுக்காக “ இபன்கட்டுவ ஆரம்ப வரலாற்றுக் காலகட்ட கல் மயான”மி” எனத் தலைப்பிட்ட வகையில் அங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள், அடக்க முறைகள், கண்டுபிடிப்புக்கள் போன்ற உள்ளடங்கல்களாக 03 மொழிகளிலும் அமைந்த சிட்டை வழங்கப்படுகின்றது.

சுற்றுலாப் பயணிகளுக்காக ஓய்வுநேர இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு சீமேந்தினாலான இருக்கைகளும், மரத்துண்டுகளாலான இருக்கைகளும் காணப்படுகின்றன. பொதுவாக சுற்றுலா நோக்கில் வருகை தரும் பயணிகள் ஞாபகப்பொருட்களை சேமிப்பதுண்டு. இதற்காக இயற்கையான முறையில் வைக்கோலால் வேயப்பட்ட குடிசைக்கட்டிடம், புத்தகங்கள், கல்லறைகளின் மாதிரி வடிவங்கள், புத்தர் சிலைகள், சிகிரியா புகைப்படங்கள், இபன்கட்டுவ புகைப்படங்கள் என்பன விற்பனை செய்யப்படுகின்றன. இம் மையத்தின்

நடைபாதை இயற்கை முறையில் புற்தரைகள், தாவரங்கள் என்பனவற்றைக் கொண்டு அலங்கரிக்கப்பட்டுள்ளன.

இபன்கட்டுவ மையத்தில் பல்வேறு வகையிலான வசதிவாய்ப்புக்கள் காணப்படினும் சில குறைபாடுகளும் காணப்படுகின்றன. இங்கு காணப்படும் பெயர் பலகைகளில் தமிழ் மொழிப் பிரயோகம் தவறாகக் காணப்படுகின்றன. நுழைவாயில் பலகை ஒன்றில் " வாய்ந்த இபன்னட்டுவ இடுகாடு" என குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் தொன்மை வாய்ந்த இடுகாடு எனக் குறிப்பிடுதல் வேண்டும். அதுபோல் ஆநபயடவைாளை ஊநஅநவநசல என்ற ஆங்கிலப் பதத்திற்கு பெருங்கற்கால மயானம் என குறிப்பிடுதல் வேண்டும் மாறாக தொல்பொருட்சாலை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தொல்பொருட்கள் பற்றிய குறிப்புக்களில் அவற்றை கண்டுபிடித்தவர்களின் பெயர்கள், பயன்பாடு பற்றி குறிப்பிடப்படவில்லை. அவைபற்றிய முழுமையான விளக்கங்கள் அளிக்கப்பட்டிருப்பின் அறிவுசார் விருத்திக்கு பயனுள்ளதாக அமையும். 1970 களில் மேற்கொண்ட அகழ்வாய்வுப் பிரதேசம் அபிவிருத்தி அற்ற நிலையில் காணப்படுகின்றமையும் ஓர் முக்கிய குறைபாடாகும்.

## 5. முடிவுரை

2500 வருட காலத்திற்கு முற்பட்ட ஓர் இடுகாட்டுப் பரப்பாகக் காணப்படும் இபன்கட்டுவ பெருங்கற்கால மையம் பெருங்கற்காலத்தை மட்டுமல்லாது அதற்கு முற்பட்ட வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை அறிந்து கொள்ளவும் இவ் அகழ்வாய்வுகள் உதவுகின்றன. இபன்கட்டுவ பொல்வத்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் பயன்படுத்திய ஈட்டிகளின் முனைகள் கண்டறியப்பட்டுள்ளன. இவை வரலாற்றுதயகால வரலாற்றுக்கு முற்பட்ட கால இடைத்தொடர்பினை அறிய உதவுகின்றன. அத்துடன் இம் மையத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஈமத்தாழிகள், கல்லறைகள், மட்பாண்டங்கள், மணிகள், சுடுமண்ணுருவங்கள், கழிவிரும்புகள் மூலம் இபன்கட்டுவ பகுதியில் நிலவிய பெருங்கற்காலப் பண்பாட்டம்சங்களை அறிய முடிவதுடன் பாளி இலக்கியங்கள் கூறும் மனித வரலாற்றை மாற்றியமைப்பதாகவும் இம் மைய அகழ்வாய்வு அமைகின்றது. அத்துடன் இங்கு காணப்படும் காட்சிக்கூடம் திறந்த வெளி காட்சிக் கூடமாகக் காணப்படுவதுடன் கண்டெடுக்கப்பட்ட கல்லறைகள், ஈமத்தாழிகள் அவ்வாறே காட்சிப்படுத்தப்பட்டிருப்பதும் ஓர் முக்கியமான விடயமாகும். அத்துடன் இவ் காட்சிக்கூடத்தில் காணப்படும் குறைகளை நிவர்த்தி செய்யும் போது ஒரு முழுமையான வரலாற்றை வெளிப்படுத்தும் ஒரு காட்சிக்கூடமாக மாறும் என்பதில் ஐயமில்லை.

**உசாத்துணை நூல்கள்**

1. கிருஸ்ணராஜா, செ. ( 2009) . இலங்கை பண்பாட்டு பரிணாமத்தின் அடிப்படைகள். A & B Creation.
2. புஸ்பரட்ணம், ப. ( 2017) . இலங்கைத் தமிழர் ஒரு சுருக்க வரலாறு. தமிழ்க் கல்விச் சேவை சுவிஸ்லாந்து.
3. Ragupathy ,P. ( 1987) . Early Settlements In Jaffna: Archaeological Survey. Madras.
4. Priyantha Padmalal Karunaratne, 2010, Secondary state formation during the early iron age on the island of sri lanka, University of California.
5. "Prehistoric cemetery at Ibbankatuwa", Sunday Observer (Sri Lanka), 16 December 2016.

**நேர்காணல்**

1. சுஜித் வனசிங்க , இபன்கட்டுவ தொல்லியல் மையத்தின் பொறுப்பதிகாரி.

**இணையத்தள கட்டுரைகள்**

1. https://www.attractionsinsrilanka.com
2. https://www.classicsrilanka.com
3. https://www.tripadvisior.com